# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,931/8—1970 නොවැම්බර් 11 වැනි බදාදා — 1970.11.11

14,931/8 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV—உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### நகர சபைகள் கட்டளைச் சட்டம்

**184 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

(255 ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 ம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினால்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான்—

(அ) சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் சுமத்தப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதில் வேண்டுமென்றே அசட்டையும் தகாத நடத்தையும் ;

(ஆ) தகுதியின்மையும் தவறான முகாமையும், அத்துடன்

(இ) சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் வழங்கப்பட்ட தத்துவங்களின் துர்ப்பிரயோகமும்

வவுனியா நகர சபையினிடத்து இருக்கின்றதென்பதற்குப் போதிய ஆதாரம் உண்டு எனத் திருப்திப்பட்டுள்ளேன். ஆதலால், இக்கட்டளை வாயிலாக—

(அ) வவுனியா நகர சபையைக் கலைக்கிறேன், அத்துடன்

(ஆ) சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் அந்நகரத்திற்கு ஒரு புதிய நகர சபை அமைக்கப்படும்வரையில் அந்நோக்கத்திற்கெனச் சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு நகர சபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அதற்குரிய கடமைகளைச் செய்வதற்குமாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. கனகநாயகம் நல்லைநாதன் அவர்களை வவுனியா நகரத்தின் கருமங்களை நிர்வகிப்பதற்காக விசேட ஆணையாளராக நியமிக்கிறேன்.

ෆී. ආර්. ඩී. බණ්ඩාරනායක,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள்
அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ௵ நவம்பர் ௴ 11 ந் உ.
11–613


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.